செ.வெ.எண்: 74/2017 நாள்: 27.01.2017

**பத்திரிக்கைச் செய்தி**

மாற்றுத் திறனாளிகள் நலத்துறை மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு நல உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

அவர்களுடைய பொருளாதார சூழ்நிலை முன்னேற்றம் அடைவதற்கும், பிறர் உதவி இன்றி சுயமாக செயல்படுவதற்கும், சுய தொழில்கள் செய்யும் வண்ணம் வங்கிகள் வாயிலாக கடன் உதவி வழங்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக மாற்றுத் திறனாளிகளுக்கு தேசிய ஊனமுற்றோர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தின் சார்பாக (NHFDC) மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் நகர கூட்டுறவு வங்கிகள் வாயிலாக மானியம் இல்லா குறைந்த வட்டியில் கடனுதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்தில் பயன்பெற விரும்பும் மாற்றுத் திறனாளிகள் கீழ்குறிப்பிட்ட சிறப்பு முகாம்களில் ஏதேனும் ஒன்றில் கலந்து கொண்டு விண்ணப்பிக்குமாறும் முகாமில் கலந்து கொள்ளும் மாற்றுத் திறனாளிகள் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் -3, மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை அசல் மற்றும் நகல் - 3, குடும்ப அட்டை நகல் -3, விலைப்புள்ளி பட்டியல்-1, கல்விச் சான்றிதழ் நகல் -3 கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேற்படி முகாமிற்கு கை, கால் குறைபாடுடையோர், செவித்திறன் குறைபாடுடையோர், பார்வை குறைபாடுடையோர், குறைந்த கண்பார்வை உடையோர், தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்த மாற்றுத்திறனாளிகள் மற்றும் மனவளர்ச்சி குன்றியோர், அதன் தொடர்புடைய மாற்றுத் திறனாளிகளாக இருப்பின் அவர்களுடைய பெற்றோர் / பாதுகாவலர் விண்ணப்பிக்க இதன்மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**மாற்றுத் திறனாளிகளுக்கு மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் நகர கூட்டுறவு வங்கி வாயிலாக ரே்குனுஊ திட்டத்தின் கீழ் கடன் உதவி வழங்கும் பொருட்டு கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற உள்ள சிறப்பு முகாம்கள் விபரம்**

| வ. எண் | ஊர் | நாள் | முகாம் நடைபெறும் இடம் | நேரம் |
|---|---|---|---|---|
| 1 | நாகர்கோவில் | 31.1.2017 | மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம், நாகர்கோவில் | காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை |
| 2 | ஆலங்கோடு | 3.2.1017 | சி.எஸ்.ஐ மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளி, போலியோ இல்லம், ஆலங்கோடு, நெய்யூர் அஞ்சல் | |
| 3 | மேல்புறம் | 7.2.2017 | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், மேல்புறம் | காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை |
| 4 | திருவட்டார் | 10.2.2017 | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருவட்டார் | |

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் **04652 279411**

ஒம்/-

மாவட்ட ஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

//உத்தரவின்படி//

மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.